بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் 13.01.2017 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

சிலர் மார்க்கம் மற்றும் மதம் தமது சுதந்திரத்தை அழிக்கின்றது; அவர்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கின்றது என்று கூறுகின்றனர். ஆனால், அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: வமா ஜஅல அலைக்கும் ஃபித்தீனி மின் ஹரஜ் – அதாவது, மார்க்கத்தின் அம்சங்களுள் உங்களுக்கு கஷ்டம் தரக்கூடிய எதுவும் வைக்கப்படவில்லை. மாறாக, ஷரீஅத்துடைய நோக்கம் மனிதனுடைய சுமையைக் குறைப்பதாகும். அது மட்டுமல்லாமல் எல்லா வகையான துன்பங்களிலிருந்தும் அவனை காப்பாற்றுவதும் ஆகும். எனவே, அல்லாஹ்வின் கூற்றில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இஸ்லாமிய மார்க்கம் உங்களுக்காக இறக்கப்பட்டுள்ளது. இதில் உங்களை கஷ்டத்தில் இடக்கூடிய எந்தக் கட்டளையும் இல்லை. மாறாக, சின்னஞ்சிறு கட்டளையிலிருந்து பெரிய பெரிய கட்டளைகள் வரை ஒவ்வொரு கட்டளையும் ரஹ்மத் மற்றும் பரக்கத்திற்கு காரணமாகவே இருக்கிறது. எனவே, மனிதனின் சிந்தனைதான் தவறாகும். அல்லாஹ்வின் வார்த்தை தவறாக இருக்க இயலாது.

அல்லாஹ்வின் படைப்பினமாக இருந்து கொண்டு அவனது கட்டளையின்படி நடக்கவில்லை என்றால், நாம் நம்மையே நஷ்டப்படுத்திக் கொள்வோம். மனிதன் சிந்திக்கவில்லை என்றால் ஷய்த்தான் முதல் நாளிலேயே நான் மனிதனை வழிகெடுத்து அவனுக்கு நஷ்டம் விளைவிப்பேன் என்று உறுதி எடுத்துள்ளான். அவன் மனிதனை அழிவின் குழியில் தள்ளி விடுவான். ஆக, அவனது தாக்குதலிலிருந்து தப்பிக்க வேண்டும் என்றால் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்றுக் கொள்வது அவசியமாகும். சில விஷயங்கள் வெளிப்படையில் சிறியவையாகத் தோன்றுகின்றன. ஆனால், காலம் செல்லச் செல்ல அதனை சாதாரணமாக நினைத்ததன் காரணமாக அதன் விளைவு மிகவும் அபாயகரமான வடிவத்தைப் பெற்று விடுகிறது. எனவே, ஒரு முஃமீன் ஒருபோதும் எந்தக் கட்டளையையும் சிறியதாகக் கருதக் கூடாது.

இக்காலத்தில் நாம் பார்க்கிறோம். உலகில் பெரும்பாலார் மார்க்கத்திலிருந்து விலகி விட்டனர். எனவே, அவர்களின் நன்மை தீமையின் அளவுகோலும் கூட மாறிக் கொண்டே செல்கின்றது. உதாரணமாக இக்காலத்தில் நாம் பார்க்கிறோம். சுதந்திரம் அல்லது ஃபேஷன் என்ற பெயரில் ஆண்கள் மற்றும் பெண்களிடம் நிர்வாண நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. முன்னேற்ற நிலையின் அடையாளம் பகிரங்கமாக வெட்கமற்று நடப்பதாகும். வெட்கம் என்ற பெயரே இல்லை. இதன் தாக்கம் அவர்களுடன் இருக்கின்ற நமது குழந்தைகளிடமும் வெளிப்படும் என்பது வெளிப்படையாகும். ஓரளவுக்கு வெளிப்பட்டும் உள்ளது. சில குழந்தைகள் பருவ வயதை அடி எடுத்து வைக்கும்போது, இஸ்லாத்தில் ஏன் பர்தா அவசியமானதாக உள்ளது? நாங்கள் நெருக்கமான ஜீன்ஸ், பிளவுஸ் அணிந்தவாறு புர்கா இல்லாமல், கோட் இல்லாமல் வெளியே ஏன் செல்லக் கூடாது? நாங்கள் ஐரோப்பாவின் சுதந்திரமான பெண்கள் போன்று ஏன் உடை அணியக் கூடாது? என்று எனக்கு எழுதுகிறார்கள்.

முதலில் நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், நாம் மார்க்கத்தில் நிலை நிற்க வேண்டும் என்றால் பிறகு மார்க்க போதனைகளையும் செயல்படுத்த வேண்டும். நாம் முஸ்லிம்கள் என்றும், மார்க்கத்தில் நிலை நிற்பதாகவும் அறிவிக்க வேண்டும். பிறகு இந்தக் கட்டுப்பாடுகளும் அவசியமாகும். அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களுடைய கருத்தின்படி செயல்படுவதும் அவசியமானதாகும். **'வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.** எனவே, வெட்கம் உடையோரின் ஆடை மற்றும் பர்தா நமது ஈமானைக் காப்பாற்றுவதற்கு அவசியமாகும். முன்னேற்றமடைந்த நாடுகள் சுதந்திரம் மற்றும் முன்னேற்றம் என்ற பெயரில் தமது வெட்கத்தை ஒழித்து விட்டிருக்கிறார்கள் என்றால், அதற்கு காரணம் அவர்கள் மார்க்கத்தில் இருந்தும் கூட விலகி விட்டனர். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஓர் அஹ்மதி பெண் ஏற்றுக் கொண்டுள்ளார் என்றால், நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவேன் என்று அவர் ஓர் உடன்படிக்கை செய்துள்ளார். ஒரு பெண்ணோ ஆணோ ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்றால், அவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவதாக வாக்குறுதி அளித்துள்ளார். இந்த முன்னுரிமை என்பது மார்க்க போதனைக்கேற்ப செயல்படும்போதுதான் நடக்க முடியும். நமது நற்பாக்கியம் நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாக விளக்கி விட்டார்கள்.

**இந்த வகையில் பர்தாயின்மை மற்றும் வெட்கமின்மை குறித்து அன்னார் ஓரிடத்தில் விளக்கியவாறு கூறுகின்றார்கள்:**

''**ஐரோப்பாவைப் போன்று பர்தாயின்மைக்கு மக்கள் அழுத்தம் தருகிறார்கள்.** ஆனால், அது ஒருபோதும் உகந்ததல்ல. இந்த சுதந்திரம்தான் பெண்களின் கட்டுப்படாமைக்கும் தீமைக்கும் வேர் ஆகும். **எந்த நாடுகள் இந்த வகை சுதந்திரத்திற்கு அனுமதி கொடுத்து விட்டனவோ அவர்களின் நல்லொழுக்க நிலையை சற்று பார்வையிடுங்கள். அவர்களின் இந்த சுதந்திரம் மற்றும் பர்தாயின்மையால் இவர்களின் ஒழுக்கமும், தூய்மையும், கற்பு ஒழுக்கமும் அதிகமாகி இருந்தால் நாம் தவறில் இருப்பதாக ஒத்துக் கொள்வோம்.** ஆனால், ஆணும் பெண்ணும் இளம் வயதினராகவும் சுதந்திரமாகவும் பர்தா இல்லாமலும் இருந்தால் அவர்களின் தொடர்புகள் எந்த அளவுக்கு ஆபத்தானதாக இருக்கும். தீய பார்வையை வீசுதல் மன

எழுச்சிகளால் பெரும்பாலும் மிகைப்படுத்துதல் மனிதனின் இயல்பான தன்மையாகும். பிறகு பர்தாவில் சுதந்திரம் இல்லாமல் இருக்கிற நிலையில் அவர்கள் கட்டுப்படாமைக்கும் தீமைக்கும் உட்படுவார்கள் என்றால், பிறகு சுதந்திரமாக இருந்தால் எதுதான் நடக்காது? ஆண்களின் நிலையை சற்று மதிப்பிட்டுப் பாருங்கள். எந்த அளவுக்கு கடிவாளமற்ற குதிரைகளைப் போன்று ஆகி விட்டார்கள். இறைவனை பற்றிய அச்சமும் இல்லை. மறுமையைப் பற்றிய நிச்சய உறுதியும் இல்லை. உலக ரசனைகளை தமது வணக்கத்திற்குரியவையாக்கி வைத்துள்ளனர். எனவே, எல்லாவற்றிற்கும் முதலில் தேவை இந்த சுதந்திரம் மற்றும் திரையின்மைக்கு முன்னர் முதலில் உங்கள் நல்லொழுக்கத்தைச் சரி செய்யுங்கள். அது சரியாகி விட்டால் ஆண்களில் குறைந்தபட்சம் அவர்கள் தமது மனக் கிளர்ச்சிகளால் வெல்லப்படாத அளவுக்கு ஆகி விட்டார்கள் என்றால் பர்தா தேவையா? இல்லையா? என்ற அந்த நிலையில் இந்த விவாதத்தைச் சீண்டுங்கள். அது அல்லாமல் தற்போதைய சூழ்நிலையில் இதன் பக்கம் அழுத்தம் தருவது, சுதந்திரம் திரையின்மைக்கு அழுத்தம் தருவது சிங்கத்தின் முன் ஆடுகளை வைப்பதாகும். இவர்களுக்கு என்ன ஆகி விட்டது? ஒரு செயலின் விளைவை சிந்திப்பதில்லை. குறைந்தபட்சம் தமது மனசாட்சியை பயன்படுத்தட்டும்! பெண்களை ஆண்களுக்கு முன்னால் திரையின்றி வைக்கப்படுவதற்கு ஆண்களின் நிலை என்ன சீர்திருத்தப்பட்டதாக உள்ளதா?''

இக்கால சமூகத்தில் நமக்கு தீமைகள் தென்படுகின்றன. இவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒவ்வொரு சொல்லையும் உண்மைப்படுத்துகின்றன. எனவே, ஒவ்வோர் அஹ்மதி பையன்களும் பெண்களும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் வெட்கத்தின் தரத்தை உயர்த்தியவாறு சமூகத்தின் அசுத்தத்திலிருந்து தப்பிக்க முயற்சி செய்ய வேண்டும். தாழ்வு மனப்பான்மையால் ஏன் பர்தா அணிவது அவசியம்? நாம் நெருக்கமான ஜீன்ஸ் மற்றும் பிளவுஸ் ஏன் அணியக் கூடாது? என்று கேள்வி கேட்பதல்ல.

பெற்றோர் – குறிப்பாக தாய்மார்களின் பணி என்னவென்றால், சிறு வயதிலேயே இளம் பெண்களுக்கு இஸ்லாமிய போதனை மற்றும் சமுதாயத்தின் தீமையைப் பற்றி கூறுங்கள். அப்போதுதான் நமது சந்ததிகள் மார்க்கத்தில் நிலை நிற்க முடியும். பெயர் தாங்கி முன்னேற்றம் பெற்ற நாடுகளின் விஷத்திலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும். இந்த நாடுகளில் இருந்து கொண்டு பிள்ளைகளை மார்க்கத்துடன் இணைப்பது, வெட்கத்தைப் பாதுகாப்பது ஆகியவற்றிற்காக பெரும் ஜிஹாது செய்ய வேண்டிய தேவை உள்ளது. அதற்காக அவர்கள் தமது முன்மாதிரியைக் காட்ட வேண்டும்.

அதுபோன்று கடந்த நாட்களில் ஒரு பெண் எனக்கு கடிதம் எழுதியுள்ளார்: **நான் நன்கு படித்தவள். எனக்கு வங்கியில் நல்ல வேலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. நான் கேட்க விரும்புவது என்னவென்றால், நான் அங்கு துப்பட்டா அணியவோ, பர்தா அணியவோ கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டால், கோட் கூட அணிய இயலாது என்றால் நான் அந்தப் பணியைச் செய்யலாமா? பணி முடிந்த பிறகு திரையிட்டுக் கொள்ளலாமா? மேலும் கூறுகிறார்: நான் கேள்விப்பட்டுள்ளேன். பணி செய்யும் பெண்கள் தமது பணி செய்யும் இடத்தில் தமது புர்காவை கழற்றி வைத்து விடலாம் என்று தாங்கள் கூறினார்களாம்! இந்த இளம் பெண்களுக்கு குறைந்தபட்சம் இந்த நற்பாக்கியமாவது கிடைத்துள்ளது! அதாவது தாங்கள் தடுத்தால் நான் அந்த பணியைச் செய்ய மாட்டேன் என்று அந்தப் பெண் எழுதியிருந்தார்.**

முதல் விஷயம் என்னவென்றால், **இது ஒரு பெண்ணின் கேள்வியல்ல. பல பெண்களின் கேள்வியாகும்** என்று நான் கூறினேன். எனவே அது பற்றி விளக்குகிறேன். மருத்துவர்களுக்கு சில சூழ்நிலைகளில் நிர்பந்தம் உள்ளது. மரபுப்படியான புர்கா, ஹிஜாப் அணிந்து பணி செய்ய இயலாது. உதாரணமாக, அறுவை சிகிச்சை செய்யும்போது அவர்களின் உடையில், தலையில் தொப்பி இருக்கும். முகமூடி (மாஸ்க்) இருக்கும். நல்ல தளர்வான ஆடையும் இருக்கும். இது மற்ற சந்தர்ப்பங்களில் மருத்துவர்கள் பர்தா அணிந்து பணி செய்யவும் முடியும். ரப்வாவில் நமது மருத்துவர் ஃபஹ்மீதா இருக்கிறார்கள். இவர்களை எப்போதும் நான் பர்தாவில்தான் பார்த்துள்ளேன். மருத்துவர் நுஸ்ரத் ஜஹான் இருந்தார்கள். நல்ல உறுதியான பர்தா அணிபவராக இருந்தார்கள். இங்கு (இலண்டனில்) வந்து கூட கல்வி கற்றார்கள். ஒவ்வோர் ஆண்டும் புதிய ஆராய்ச்சிகளுக்கேற்ப தமது தகுதியை வளர்ப்பதற்காக இங்கு இலண்டன் வரவும் செய்தார்கள். எப்போதும் பர்தாவில்தான் இருந்தார்கள். இன்னும் சொல்வதென்றால், தேவையை விட அதிகமாகவே பர்தாவை பேணி வந்தார்கள்.

அதேபோன்று ஆராய்ச்சி செய்யும் பெண்களிடம், ஆய்வகத்தில் அவளுக்குப் பிரத்யேக ஆடை அணிய வேண்டியது ஏற்பட்டால் அங்கு, 'அங்குள்ள சூழ்நிலையின் ஆடையை அணியலாம்' என்று கூறினேன். அப்போது சந்தேகமின்றி ஹிஜாப் அணிய வேண்டாம். ஏனெனில், அதில் தொப்பி போன்றவை அணிய வேண்டியதிருக்கும். ஆனால், வெளியே வந்ததும் இஸ்லாம் கட்டளையிட்ட பர்தாவை அணிய வேண்டும். வங்கிப் பணி என்பது மனித இனத்திற்கு சேவை செய்யும் பணி ஒன்றும் அல்ல. எனவே, சாதாரண பணிகளுக்கு ஹிஜாபை (திரையை) அகற்றி விடுவதற்கு அனுமதி தர இயலாது. அதுவும் பெண்கள் அன்றாட உடைகள் மற்றும் மேக்–அப்பில் இருக்கும் நிலையில் பிரத்யேக உடை எதுவும் அணியப்படாத நிலையில் (அனுமதிக்க முடியாது).

எனவே, எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். வெட்கத்தை மேற்கொள்ள வெட்கத்தை வெளிப்படுத்தும் ஆடை அவசியமாகும். பர்தாவுக்கான இப்போதைய வழிமுறை வெட்கத்தை வெளிப்படுத்தும் ஆடையின் ஓர் அங்கமாகும். பர்தாவில் மென்மை காட்டினால் வெட்கத்தை வெளிப்படுத்தும் சாதாரண ஆடையிலும் கூட பல காரணங்களைக் கூறி மாற்றங்களைச் செய்து விடுவர். பிறகு இந்த சமுதாயத்தின் சாயலுக்கு உள்ளாகி விடுவர். இங்கு முன்னரே வெட்கமின்மை அதிகமாகிக் கொண்டு செல்கிறது. **தமது மார்க்கத்தின் போதனையின்படி செல்பவர்களை குறிப்பாக முஸ்லிம்களை எவ்வாறு அவர்களின்**

மார்க்கத்திலிருந்து அகற்றுவது? என்று உலகம் முயற்சி செய்கிறது. **இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகள் கடுமையாக அழுத்தம் தருகின்றன. மார்க்கப் போதனைகளை முஸ்லிம்களுக்குள் இருந்தே ஒழித்து விட வேண்டும் என்று நினைக்கின்றன. இந்த சக்திகள் ஒரு முயற்சியைச் செய்கின்றன. மார்க்கத்தை கருத்து சுதந்திரம் என்ற பெயரில் ஒழித்து விட வேண்டும். அதுவும் பலவந்தமாக மார்க்கத்தை நாம் ஒழிக்கிறோம் என்று தமக்கு எந்தப் பழியும் வராத அளவுக்கு அதனை செய்ய வேண்டும். இது ஓர் அனுதாபம் என்று புரியப்பட வேண்டும் என்று நினைக்கிறார்கள்.** ஷய்த்தானைப் போன்று இனிக்க இனிக்க மார்க்கத்தின் மீது தாக்குதல் நடத்த நினைக்கின்றனர். நாம் துஆவிற்கு அழுத்தம் தர வேண்டும். அல்லாஹ் இந்த ஷய்த்தானிய முயற்சிகளை எதிர்கொள்ள நமக்கு தைரியமும் வாய்ப்பும் வழங்குவானாக! மேலும் நமக்கு உதவியும் செய்வானாக! நாம் உண்மையின் மீது நிலை நின்றால் நிச்சயமாக நமக்கு ஒருநாள் வெற்றியும் உறுதியானது. இஸ்லாமிய போதனையே உலகில் வெற்றி பெற வேண்டியுள்ளது.

இஸ்லாம் நிரந்தரமாக இருக்கக் கூடியதாகும். திருக்குர்ஆனின் போதனைகள் இறுதி நாள் வரைக்கும் ஆனவையாகும். எனவே நாம் எந்த தாழ்வு மனப்பான்மையும் இன்றி நமது போதனையின்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். மேலும் அதன் மீது நிலைத்து நிற்க வேண்டும். பிறருக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். நீங்கள் செய்பவை இறை விருப்பத்திற்கு மாற்றமானவையும் அழிவின் பக்கம் எடுத்துச் செல்பவையும் ஆகும். இஸ்லாம் என்பது தவறான கட்டுப்பாடுகளை விதித்து மனிதனை துன்புறுத்தக் கூடிய மார்க்கம் அல்ல. மாறாக, தேவைக்கேற்ப அதன் போதனையில் மென்மையின் அம்சமும் உண்டு. அஹ்மதிகளாகிய நாம் நினைவில் கொள்ள வேண்டும். இக்காலம் மிகவும் ஆபத்தான காலமாகும். ஷய்த்தான் எல்லா தரப்பிலிருந்தும் ஆவேசமான தாக்குதலைத் தொடுக்கிறான். குறிப்பாக முஸ்லிம்கள், அஹ்மதி முஸ்லிம்கள் ஆண்கள், பெண்கள் அனைவரும் மார்க்க நிலைப்பாட்டை நிலைநாட்ட முயற்சி செய்யாவிட்டால் நம்மை காப்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. நாம் மற்றவரை விட அதிகமாக இறைவனது பிடியில் வந்து விடுவோம். நாம் உண்மையை புரிந்தோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு புரிய வைத்தார்கள். பிறகும்கூட நாம் செயல்படவில்லை என்றாகி விடும். எனவே, நாம் நம்மை அழிந்து விடுவதிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்றால் ஒவ்வொரு இஸ்லாமிய போதனையுடன் இசைந்து உலகில் வாழ்வது அவசியமாகும். முன்னேற்றமடைந்த நாட்டின் முன்னேற்றத்தில் நமது வாழ்வுக்கு உத்திரவாதம் உள்ளது என்று கருதாதீர்கள். அதனுடன் சென்றால்தான் நாம் நிலைக்க முடியும். இந்த முன்னேற்றமடைந்த நாடுகளின் முன்னேற்றம் எல்லையைத் தொட்டு விட்டது. இவர்களின் ஒழுக்கநிலைகள் இவர்களை அழிவின் பக்கம் எடுத்துச் சென்று கொண்டிருக்கின்றன. அதன் தாக்கம் வெளிப்பட்டு விட்டது. அல்லாஹ்வின் கோபத்தைக் கூவி அழைக்கின்றன. அழிவினை அழைக்கின்றன. இந்நிலையில் மனிதாபிமானத்தின் கீழ் நாமே தான் இவர்களுக்கு சரியான வழியைக் காட்டி காப்பாற்ற வேண்டும். இவர்களின் சாயலில் நாமே ஆகி விடக் கூடாது. இவர்களிடம் சீர்திருத்தம் ஏற்படவில்லையென்றால் இவர்களின் அகம்பாவம் மார்க்கத்தை விட்டு விலகுதலின் காரணமாக அது வெளிப்படையாக சிரமமாகத் தோன்றுகிறது. பிறகு நல்லொழுக்கங்களை நிலைநாட்டவும் மார்க்கத்தின் கண்ணியத்தையும் நிலைநாட்டக் கூடியவர்கள் தமது பங்கை ஆற்றுவர். அவர்கள் மூலமே வருங்கால உலகின் முன்னேற்றம் ஏற்படும்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று குறிப்பாக இளைஞர்கள் அல்லாஹ்வின் போதனையின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. உலகின் தாக்கத்திற்குள்ளாகி அதன் பின்னால் போவதற்குப் பதிலாக உலகை தமது பின்னால் வர வைக்க வேண்டும். **நான் பர்தா மற்றும் உடைகள் சம்பந்தமாக என் பேச்சைத் தொடங்கியது போன்று இது சம்பந்தமாக இதனையும் கூற விரும்புகிறேன். மிகவும் வருத்தத்துடன் கூற விரும்புகிறேன்.**

**இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்திற்கு பர்தாவா மிக முக்கியமானது? இந்த போதனை பழைமையாகி விட்டது என்று மக்கள் கூறுகின்றனர். நாம் உலகை எதிர்கொள்வதற்கு இதையெல்லாம் விட்டு விட வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர் – நவூதுபில்லாஹ்.** அத்தகையோர் தெளிவு பெற வேண்டும். உலகியல்வாதிகள் பின்னால் சென்றீர்கள் என்றால் அவர்களைப் போன்று வாழ்வைக் கழித்தீர்கள் என்றால் பிறகு உலகை எதிர்த்து நிற்பதற்குப் பதில் உலகில் மூழ்வி விடுவீர்கள். தொழுகையும் கூட சிறிது சிறிதாக வெளிப்படையான நிலையில் நின்று விடும். பிறகு பிற நன்மைகள், மார்க்கச் செயல்கள் வெளி வடிவத்திலேயே நின்று விடும். பிறகு சிறிது சிறிதாக அவைகளும் போய் விடும். எனவே, அல்லாஹ்வின் எந்தக் கட்டளையையும் சாதாரணமாகக் கருதக் கூடாது. இது மிகவும் அஞ்சத்தக்க இடமாகும். இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கு அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் கட்டளையிட்ட ஒவ்வொன்றும் மிகவும் அவசியமாகும். பர்தாவின் கண்டிப்பான சட்டங்கள் பெண்களுக்கு மட்டுமல்ல. இஸ்லாமிய கட்டுப்பாடுகள் பெண்களுக்கு மட்டுமல்ல. மாறாக, ஆண் பெண் இரு பிரிவினருக்கும் உரியதாகும். அல்லாஹ் முதலில் ஆண்களுக்கு வெட்கம் மற்றும் பர்தாவின் வழிமுறையைக் கூறினான்.

இந்த வகையில் இறைவன் கூறினான்: முஃமீன்களிடம் கூறுவீராக! அவர்கள் தமது கண்களை கீழ் நோக்கி வைக்கட்டும். தமது வெட்கஸ்தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இது அவர்களுக்கு அதிக தூய்மைக்குக் காரணமாக அமையும். நீங்கள் செய்வதை நிச்சயமாக அல்லாஹ் நன்கறிகிறான்.

அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களைப் பார்த்து முதலில் கீழ் நோக்கிப் பார்வையை வைக்குமாறு கூறினான். ஏன்? ஸாலிக அஸ்காலஹூம் – தூய்மைக்கு அது மிகவும் தேவையாகும். தூய்மை இல்லையென்றால் இறைவன் கிடைக்க மாட்டான். எனவே, பெண்களின் பர்தாவுக்கு முன்னால் ஆண்களிடம் கூறி விட்டான்.

நீர் முஃமினான பெண்களிடம் கூறுவீராக! அவர்கள் தமது கண்களை கீழ் நோக்கி வைக்க வேண்டும். தமது மறைவிடங்களைப் பாதுகாக்க வேண்டும். தானே வெளிப்படுவதைத் தவிர தமது அழகை வெளிப்படுத்தக் கூடாது. தமது முந்தானைகளால் தலையை மூடுங்கள். தமது அழகை வெளிப்படுத்துங்கள். உங்கள் கணவருக்கு, உங்கள் தந்தையருக்கு அல்லது உங்கள் கணவரின் தந்தையர் அல்லது உங்கள் மகன்கள் அல்லது உங்கள் கணவர்களின் மகன்கள், அல்லது உங்கள் சகோதரர் அல்லது உங்கள் சகோதரர்களின் மகன்கள் அல்லது உங்கள் சகோதரிகள் அல்லது உங்கள் சகோதரிகளின் மகன்கள் அல்லது உங்கள் பெண்கள் உங்கள் கண்காணிப்பின் கீழ் இருக்கிற ஆண்கள் அல்லது பாலியல் ஆசைகள் அற்ற ஆண் பணியாளர்கள் பெண்களின் பர்தாவின் உள் இருக்கும் இடங்களைப் பற்றி தெரியாத சிறுவர்கள், இவர்களைத் தவிர அவர்கள் தமது பாதங்களை பூமியில் தட்டக் கூடாது. பெண்கள் தமது அழகில் மறைந்துள்ளவை வெளிப்படுவதற்காக முஃமின்களே நீங்கள் முழுக்க முழுக்க அல்லாஹ்வின் பக்கம் தவ்பா செய்தவாறு குனியுங்கள். அதன் மூலம் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: இக்காலத்தில் பர்தாவின் மீது தாக்குதல் கொடுக்கப்படுகிறது. ஆனால், இம்மக்கள் அறியவில்லை. இஸ்லாமிய பர்தாவின் பொருள் சிறைச்சாலை அல்ல. ஒரு வகை தடையாகும். அதாவது அன்னிய ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் பார்க்காமல் இருப்பதற்காகவாகும். பர்தா இருந்தால் தடுமாற்றத்திலிருந்து பாதுகாக்கப்படுவர். ஒரு நடுநிலையாளர் கூற முடியும். அன்னிய ஆணும் பெண்ணும் ஒன்றாக எந்த தடையும் இன்றி சந்திக்க முடிந்தால் உலாவினால் எவ்வாறு மன எழுச்சியிலிருந்து கட்டாய சூழ்நிலையில் தடுமாறாமல் இருப்பர்? பெரும்பாலான நேரங்களில் கேட்கவும் பார்க்கவும் வருவது என்னவென்றால், அன்னிய ஆணையும் பெண்ணையும் ஓரிடத்தில் தனித்திருக்கவும், வாசல் கதவு அடைக்கப்பட்டு இருக்கவும் செய்வதையும் கூட அத்தகைய சமுதாயங்கள் தவறாக நினைப்பதில்லை. இதன் தீய விளைவை தடுக்கவே இஸ்லாமிய ஷரீஅத் எவரும் தடுமாறக்கூடிய அத்தகைய பேச்சுக்களைப் பேச அனுமதி தரவில்லை. எங்கு அந்நிய ஆணும் பெண்ணும் ஒன்று சேர்ந்திருக்கிறார்களோ அங்கு மூன்றாவதாக ஷய்த்தான் இருக்கிறான் என்று இஸ்லாம் அத்தகைய சூழ்நிலைகளைக் குறித்துக் கூறுகிறது. இந்த தீய போதனைகளால் ஐரோப்பா அனுபவித்துக் கொண்டிருக்கிற இந்த தீய விளைவைப் பற்றி ஆய்வு செய்யுங்கள். இந்த தீய வழக்கங்களினால் கட்டுப்பாடின்றி மிகவும் வெட்கம் கெட்ட வாழ்க்கை வாழப்படுகிறது. இது இந்த போதனையின் விளைவேயாகும். ஒரு பொருளை நம்பிக்கை துரோகத்திலிருந்து காப்பாற்ற விரும்பினால் அதனை பாதுகாப்பாக வையுங்கள். பாதுகாப்பாக வைக்கவில்லை என்றால், இவர்கள் நல்லவர்கள் தாம் என்று கருதினால், அது கண்டிப்பாக அழிந்து விடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இங்கு ஒரு விஷயத்தை தெளிவுபடுத்துகிறேன். சில பெண்கள், நாங்கள் மேக்அப் செய்துள்ளோம். முகத்தை நிகாப் ஆல் மூடினால் எமது மேக்அப் அழிந்து விடும். எவ்வாறு பர்தா அணிவது? என்று கேள்வி கேட்கிறனர். முதலில் மேக்அப் போடா விட்டால் குறைந்தபட்ச பர்தாவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி விட்டார்கள். முகம், உதடுகள் வெளியே தெரியலாம். மற்ற முகத்தின் பகுதிகள் மூடியிருக்க வேண்டும். மேக்அப் செய்தால் மூடியே ஆக வேண்டும். அல்லாஹ்வின் போதனையின்படி சென்றவாறு தமது அழகை மறைக்க வேண்டும். கணவருக்கு தமது அழகை காட்ட வேண்டும். அழகை வெளிப்படுத்தும் கட்டளைகள் விரிவானவையாகும். உறவினர்கள் அதாவது சகோதர சகோதரிகள் கணவர், தந்தை, மகன்கள் இவர்களிடம் பர்தா இல்லை. இவர்களுக்கு முன் மேக்அப் போன்றவை வெளிப்படலாம். இவர்களைத் தவிர வேறு எவரிடமும் இல்லை. இந்த விவரத்தை இறைவன் திருக்குர்ஆனில் தந்து விட்டான். இந்த உறவினர்களின் பட்டியலை தெளிவாக கூறி விட்டான். தானே வெளிப்படுகிற அழகுகள் உள்ளன. அதாவது வடிவம், உயரம் போன்றவை. வீட்டில் நெருக்கமான ஜீன்ஸ், பிளவுஸ் போட்டுக் கொண்டு இவர்களுக்கு முன் அலையலாம் என்று பொருளல்ல. அனுமதிக்கப்பட்ட இவர்களுக்கு முன்னும் வெட்கமுடையோரின் உடை அணிய வேண்டும். பர்தா அந்நிய ஆடவர் முன் அணிய வேண்டும். இன்னொரு விஷயம், நான் முரப்பிகள் மற்றும் அவர்களது மனைவிகளிடம் கூறுவேன். அவர்களும் தமது ஆடைகள் மற்றும் பார்வையை எச்சரிக்கையாக வைக்க வேண்டும். அவர்களது முன்மாதிரியை ஜமாஅத் பார்க்கிறது. முரப்பி மற்றும் முபல்லிக்குகளின் மனைவியும் கூட முரப்பியாக இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு விவகாரத்திலும் உயரிய முன்மாதிரியைக் காண்பிக்க வேண்டும். நமது ஆணும் பெண்ணும் வெட்கத்தின் உயர் தரத்தை நிலைநாட்டுபவராகவும், இஸ்லாமிய கட்டளைகளை நாம் எல்லாரும் பேணுபவராகவும் அல்லாஹ் ஆக்குவானாக!

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
on 13.01.2017
Tamil Translation : Muallim M. Nizamuddeen
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516